**செய்தி வெளியீடு எண்: 533** **நாள் : 24.10.2015**

**<u>R.K. நகரில் துவங்கப்பட உள்ள புதிய தொழிற் பயிற்சி நிலைய மாணவர் சேர்க்கை பற்றிய பத்திரிக்கைச் செய்திக் குறிப்பு</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்திரவுக்கிணங்க சென்னை R.K. நகரில் இந்தாண்டு முதல் புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கப்படவுள்ளது.

இப்புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையம் சென்னை மாவட்டம் R.K. நகரில் இருசப்பன் தெரு புதுவண்ணாரப்பேட்டையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக செயல்படும்.

இத்தொழிற் பயிற்சி நிலையத்தில் சேர்வதற்கு கீழ்க்கண்ட தகுதிகள் பெற்ற ஆண்/பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | தொழிற் பிரிவு | பயிற்சிக்காலம் | கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1) | பிட்டர் (Fitter) | 2 ஆண்டுகள் | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 2) | எலக்ட்ரீசியன் (Electrician) | 2 ஆண்டுகள் | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 3) | கம்மியர் மோட்டர் வாகனம் (MMV) | 2 ஆண்டுகள் | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி |

**வயது வரம்பு :** ஆண்களுக்கு 14 முதல் 40 வயது வரை. மகளிருக்கு வயது உச்ச வரம்பு இல்லை.

**பயிற்சிக் கட்டணம் :** பயிற்சிக்கட்டணம் இல்லை

**உதவித்தொகை:** மாதந்தோறும் ரூ.500/– உதவித்தொகை அனைவருக்கும் வழங்கப்படும்.

**மாணவ/மாணவியருக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகள்:** விலையில்லா லேப்டாப், விலையில்லா சைக்கிள், விலையில்லா புத்தகம், விலையில்லா வரைபடக்கருவி, விலையில்லா சீருடை, விலையில்லா காலணி ஆகியவை வழங்கப்படும்.

பயிற்சிகளில் சேர விரும்பும் மாணவ/மாணவியர்கள் விண்ணப்பப் படிவங்களை கீழ்க்கண்ட இடங்களில் பெற்று பூர்த்தி செய்து அங்கேயே சமர்ப்பிக்கலாம்.

**விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ.50/–.** **கடைசி நாள் :11 .11.2015.**

1) முதல்வர்,
அரசு தொழிற் பயிற்சி நிலையம்,
சென்னை நடுநிலைப்பள்ளி ,
இருசப்பன் வீதி,
புதுவண்ணாரப்பேட்டை,
சென்னை மாவட்டம்.
2) துணை இயக்குநர்/முதல்வர்,
அரசு தொழிற் பயிற்சி நிலையம்,
வடசென்னை,
சென்னை மாவட்டம்.

மாணவ/மாணவியர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இயக்குநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை**